
# திராவிடத்தால் வாழ்கிறோம்

928

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# கழகம் கண்ட சட்டப் போராட்டங்கள்

**தமிழ்.கா.அமுதரசன்**

17

கழகம் நடத்திய உயிர்ப்புமிக்க சட்டப் போராட்டங்களை உணர்வுப் பூர்வமாக விவரிக்கும் தொடர்!

# உயர்கல்வித் தடையை தகர்த்த கலைஞர்!

*2022-ஆம் ஆண்டு, பிப்ரவரி 09-ஆம் தேதி, தமிழ்நாடு சட்டமன்றக் கூட்டத்தொடரில் ஒரு விவாதம் நடைபெற்றது. 'நீட் நுழைவுத் தேர்வு விலக்கு மசோதா' தொடர்பான அந்த விவாதத்தில், 'பொறியியல் உயர்கல்வியில் நுழைவுத் தேர்வை ரத்து செய்தது யார்?' என தி.மு.க - அ.தி.மு.க. இடையே காரசார விவாதமாக அது அமைந்தது.*

*அ.தி.மு.க சட்டமன்ற உறுப்பினர் விஜய பாஸ்கர் பேசுகையில், "1984-ஆம் ஆண்டில் இருந்து அண்ணா பல்கலைக்கழகத்தில் நுழைவுத் தேர்வு இருந்தது. 2005-ஆம் ஆண்டு அப்போதைய முதல்வர் ஜெயலலிதாதான், அந்த நுழைவுத் தேர்வு ரத்துக்கு முதல்முறையாக சட்டம் கொண்டு வந்தார்" என்றார்.*

*அதற்குப் பதிலளித்த மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், "2005-ஆம் ஆண்டு நுழைவுத் தேர்வினை ரத்து செய்தோம் எனக் கூறுவது ஆதாரமற்றது. 2006-ஆம் ஆண்டுதான் அனந்தராமனின் அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பித்து, குடியரசுத் தலைவர் ஒப்புதல் பெற்று நுழைவுத் தேர்வு ரத்து செய்யப்பட்டது" என்ற தகவலைப் பகிர்ந்துகொண்டார்.*

*மீண்டும் அ.தி.மு.க. உறுப்பினர் விஜயபாஸ்கர் பேசுகையில், "2005-ஆம் ஆண்டு ஜூன் 19-ஆம் தேதி அரசாணை 184-ஐ வெளியிட்டு ரத்து செய்ய உத்தரவிட்டது, அப்போதைய முதல்வர் ஜெயலலிதாதான். அந்தச் சட்டத்தை எதிர்த்து பிரியதர்ஷினி என்ற மாணவி நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்ததால், சட்டம் ரத்து செய்யப்பட்டது. பின், 2006-ஆம் ஆண்டு அதே சட்டத்தை நீதிமன்றத்திற்குக் கொண்டு சென்றுதான் தி.மு.க. நிறைவேற்றியது" என நுழைவுத் தேர்வினை ரத்து செய்தது தி.மு.க.தான் என ஒப்புக் கொண்டார்.*

*அந்த விவாதத்தில், அன்றைக்கு உயர்கல்வித் துறை அமைச்சராக இருந்த பொன்முடி அவர்கள் குறுக்கிட்டு, "1984-ஆம் ஆண்டு நுழைவுத் தேர்வு எப்படி வந்தது, யாரால் வந்தது என விஜயபாஸ்கரே ஒப்புக் கொண்டுள்ளார். அப்போது அ.தி.மு.கவின் ஆட்சிதான் இருந்தது" என்று வரலாற்றுத் தகவலை அடிக்கோடிட்டுப் பேசினார்.*

*நமது முதலமைச்சர் அவர்கள் தலையிட்டு விவாதத்தை முடிவுக்குக் கொண்டு வந்தாலும், அன்று பல உண்மைகள் சட்டமன்றத்தின் மூலம் மீண்டும் வெளிவந்தன. நுழைவுத் தேர்வை தமிழ்நாட்டில் கொண்டு வந்தது எம்.ஜி.ஆர். என்பதும், நுழைவுத் தேர்வை ரத்து செய்தது கலைஞர் என்பதும் அந்த விவாதத்தால் உறுதியானது.*

## ஒவ்வொரு குடும்பத்திலும்

*2006-ஆம் ஆண்டு, பொறியியல் - மருத்துவப் படிப்புகளுக்கான நுழைவுத் தேர்வு ரத்து என்கிற கலைஞரின் அரசாணைக்குப் பின்னர்தான் தமிழ்நாட்டின் ஒவ்வொரு குடும்பத்தில் இருந்தும், பொறியியல் பட்டதாரிகள் உருவாகினர். அடித்தட்டு, நடுத்தர வசதி கொண்ட மக்கள், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் எந்தவிதமான சிரமங்களும் இன்றி, அண்ணா பல்கலைக் கழகத்தின் பொறியியல் உயர் படிப்புகளில் எளிதாக சேர முடிந்தது.*

*நுழைவுத் தேர்வு ரத்து என்கிற முடிவுக்கு, நம் தானைத் தலைவர் கலைஞர் வருவதற்குக் காரணமாக எது இருந்தது என்பதை ஒவ்வொரு ஆண்டும், அவரது பிறந்தநாளின் போதும், கடந்த 7 ஆண்டுகளில் நினைவு நாளின்போதும் பலரும் பகிர்ந்துகொள்ளும் அனுபவங்களே சான்றாக இருக்கும்.*

ஓவியம் : ரவி பேலட்




*2024-ஆம் ஆண்டு, அவரது நினைவு நாளின்போது, சர்வதேச நிறுவனம் ஒன்றில் பணியாற்றும் திலீப் ராஜேந்திரன் என்பவர் எழுதிய பதிவு இது.*

*"முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்களை, நான் ஏன் அதிகமாக கொண்டாடுகிறேன் என எனது பெரும்பாலான நண்பர்கள் என்னிடம் அடிக்கடி கேள்வி எழுப்புகின்றனர். நான் அவர்களுக்குச் சொல்லும் பதில், 'இன்று நான் ஒரு முதல்தலைமுறை பி.டெக் (B.TECH) பட்டதாரி ஆனது கலைஞர் அவர்களால்தான். 12-ஆம் வகுப்பிற்குப் பின் இரண்டாண்டுகள் ஆசிரியர் பயிற்சியைத் தொடர்ந்து, ஏறக்குறைய 3 ஆண்டுகள் தனியார் நூற்பாலையில் தொழிலாளியாக வேலைபார்த்து வந்தேன்.*

*2007-ஆம் ஆண்டு கலைஞர் அவர்கள் மருத்துவம் - பொறியியல் உள்ளிட்ட தொழிற் படிப்புகளுக்கான நுழைவுத் தேர்வை ரத்து செய்தார். அந்த வருடம் என்னுடன் ஆசிரியர் பயிற்சி படித்த நண்பர்கள் முறையே, சென்னை அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் திருநெல்வேலி அரசு பொறியியல் கல்லூரியில் 12-ஆம் வகுப்பில் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையில் நுழைவுத் தேர்வின்றி சேர்ந்தனர்.*

*இவர்களை முன்மாதிரியாகக் கொண்டுதான், ஏன் என்னாலும் பொறியியல் படிக்க இயலாது என்ற எண்ணம் எனக்குள் தோன்றியது. 2008-ஆம் ஆண்டு சத்தியமங்கலம் பண்ணாரி அம்மன் தொழில்நுட்பக் கல்லூரியில், அரசு ஒதுக்கீட்டின் மூலம் பி.டெக். (B.TECH) படிப்பில் சேர்ந்தேன். எனது பெற்றோர் மிகுந்த சிரமங்களுக்கு இடையேயும் எப்படியாவது என்னைப் படிக்க வைக்க வேண்டும் என்பதில் மிகவும் உறுதியாக இருந்தனர். அதற்கு அவர்கள் எனக்கு மிகுந்த உறுதுணையாகவும் ஆதரவாகவும் நின்றிருந்தாலும், என்னுடைய கனவுகளுக்கு சட்டங்களின் வாயிலாகவும் பொருளாதார உதவிகளின் வாயிலாகவும் உயிர் கொடுத்தவர் கலைஞர்.*

> "பொறியியல் நுழைவுத் தேர்வை கலைஞர் ரத்து செய்ததால்தான், இன்று நான் ரோபோட்டிக்ஸ் நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரியாக இருக்கிறேன்" எனப் பல மேடைகளில் அவர் கலைஞருக்கு நன்றி சொல்லிக் கொண்டிருக்கிறார்.

## கலைஞரின் சமூகநீதி

*நுழைவுத் தேர்வு ரத்து , கலைஞருடைய பங்களிப்பில் நடந்த மத்திய அரசின் மூலம் கல்விக்கடன், 30% பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான இட ஒதுக்கீடு (BC RESERVATION) மற்றும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கான கல்வி உதவித் தொகை என்று அனைத்து வகையிலும் அதற்கான அடித்தளத்தை அமைத்துக் கொடுத்தவர் தலைவர் கலைஞர் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. நுழைவுத் தேர்வு ரத்தும் - கல்விக்கடனும் இல்லாவிட்டால், பொறியியல் படிப்பு என்பது எனக்கெல்லாம் வெறும் கனவாக மட்டுமே இருந்திருக்கும்.*

*ஒரு சிறிய கிராமத்தில், அரசுப் பள்ளியில் தமிழ் வழியில் பள்ளிப்படிப்பை முடித்து, ஐந்து ஆண்டுகள் இடைவெளிக்குப் பிறகு கல்லூரிப் படிப்பைத் தொடர்ந்த நான், படிப்பை முடித்து இன்று உலகின் மிகச்சிறந்த நிறுவனம் ஒன்றில் பணிபுரிகிறேன் என்றால், அதற்கு முக்கியக் காரணம் தலைவர் கலைஞர் அவர்களின் சமூக நீதித் திட்டங்கள்தான். என்னைப் போன்ற நூற்றுக்கணக்கான முதல் தலைமுறை பட்டதாரிகளுக்குத் தனது சமூகநீதி பார்வையில் கல்வியை நெருக்கத்தில் தந்தவர் கலைஞர்" என்றது அவரது நீண்ட பதிவு.*

*ரோபோடிக்ஸ் ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி கெனித் ராஜ் அன்பு அவர்கள் பல இடங்களில், தனது கல்லூரிப் படிப்பு அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டுள்ளார். அவரது தந்தை தூய்மைப் பணியாளர். ஆனால், அவரோ இன்று உலகளாவிய தொழில்நுட்ப நிபுணர். இந்த மாற்றம் கலைஞரால் நிகழ்ந்தது. "பொறியியல் நுழைவுத் தேர்வை கலைஞர் ரத்து செய்ததால் தான், இன்று நான் ரோபோட்டிக்ஸ் நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரியாக இருக்கிறேன்" எனப் பல மேடைகளில் அவர் கலைஞருக்கு நன்றி சொல்லிக் கொண்டிருக்கிறார். பலரும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு, கலைஞர் நிகழ்த்திய சட்டப் போராட்டங்களும் சட்டமன்றப் போராட்டங்களும் அதிகம்.*

...தொடரும்

## அச்சு இதழ்கள் கண்காட்சி!

நூலகம், ஆவணக் காப்பகம், அருங்காட்சியகம், ஆராய்ச்சி மையங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம், சென்னை, தரமணியில் 1994-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. மறைந்த ரோஜா முத்தையாவின் சேகரிப்பைக் கொண்டு ஒரு இலட்சம் ஆவணங்களுடன் தொடங்கப்பட்ட இந்த நூலகத்தில், இன்று 5 இலட்சத்துக்கும் மேற்பட்ட ஆவணங்கள் திரட்டி வைக்கப்பட்டுள்ளன. 30 இலட்சத்துக்கும் அதிகமான பக்கங்கள், டிஜிட்டலாக்கப்பட்டு, மின்நூலகத்தில் பாதுகாக்கப்படுகின்றன. உலகின் பல பல்கலைக்கழகங்களுடன் இணைந்து, ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம் செயல்பட்டு வருகிறது.

இத்தகைய சிறப்புமிக்க ஆய்வு நூலகத்தில் 'தமிழ் அறிவு வளாகம்' (Tamil Knowledge Campus) கட்டுமானப் பணிக்கு 03.07.2025 அன்று அடிக்கல் நாட்டி, பணியைத் தொடங்கி வைத்தார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். இதற்காக 30,000 சதுர அடி நிலத்தை, தமிழ்நாடு அரசு வழங்கியுள்ளது. இதனால், தமிழ் அச்சுப் பண்பாட்டின் உறைவிடமான ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம், தமிழ் அறிவு வளாகமாகத் தற்போது பரிணமித்து வருகிறது.

இந்நிலையில், சென்னை வாரத்தை முன்னிட்டு, தனது சேகரிப்பிலிருந்து அரிய தமிழ் நூல்களையும் முன்னோடி இதழ்களையும் காட்சிப்படுத்துவதாக அறிவித்துள்ளது, ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம். இதுதொடர்பாக, வெளியாகியுள்ள அறிவிப்பில், 'தமிழ் அச்சுப் பண்பாடு என்னும் பெருங்கடலில் கால் நனைக்க அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம். ஆகஸ்ட் 16 முதல் 22 வரை, காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை அரிய தமிழ் நூல்களையும் இதழ்களையும் பார்வையிடலாம்' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஃப்ளாஷ்பேக்



## "குமாரபாளையத்தில் தலைவரைச் சந்தித்தேன்!"



கவுந்தி இராஜேந்திரன்

2000-வது ஆண்டு, அன்றைய இளைஞர் அணிச் செயலாளர் - இன்றைய கழகத் தலைவர் அவர்கள் பிரச்சாரப் பயணமாக ஈரோடு வருகை தந்தபோது, குமாரபாளையம் ஜே.கே.கே. இல்லத்தில் தங்கியிருந்தார். அப்போது, தளபதி அவர்களைச் சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. உடன், அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அவர்கள், முன்னாள் அமைச்சர் என்.கே.கே.பி. ராஜா ஆகியோர் இருக்கின்றனர்.

**- கவுந்தி இராஜேந்திரன்,**
**தலைமைக் கழகப் பேச்சாளர்,**
**பவானி, ஈரோடு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள்!

1959-ஆம் ஆண்டு, பிப்ரவரி மாதம் புதுக்கோட்டையில் நடைபெற்ற செயற்குழு, பொதுக் குழுவில்தான் உள்ளாட்சி மன்றத் தேர்தல்களில் தி.மு.க. நேரடியாகப் போட்டியிட முடிவு செய்யப்பட்டது. சென்னை மாநகராட்சித் தேர்தலில் கழக வெற்றிக்காகப் பாடுபட, கலைஞர் தலைமையில் குழு அமைக்கப்பட்டது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131